கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு

**வழக்கு எண் O.S.No.213/2011 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.பிராதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மல்லிகா | தொழில் | |
| த.பெ. | | மதம் | |
| கிராமம் | | சாதி | |
| வயது | | வட்டம் | |

**முதல் விசாரணை - 18.09.2024**

நான் இந்த வழக்கில் இரண்டாம் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 11 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 11.09.2006 – Certified copy of Sale deed executed by Arumugam in favour of Kannan, Doc.No.8056/06 – Ex.A.1.

2. 11.09.2006 – Certified copy of Sale deed executed by Arumugam in favour of Indumathi, Doc.No.8055/06 – Ex.A.2.

3. 16.03.2007 – Original Death Certificate of V.Arumugam – Ex.A.3.

4. 16.10.2006 – Xerox copy of Legal Notice caused by the Plaintiff to the defendant – Ex.A.4.

5. Original Reply notice sent by the defendant to the Plaintiff – Ex.A.5.

6. 03.10.2007 – Original Patta copy in favour of Arumugam – Ex.A.6.

7. 03.10.2007 – Original Patta copy in favour of Arumugam – Ex.A.7.

8. Original Xerox copy of Plaint filed in OS.No.271/2007 – Ex.A.8.

9. 16.10.2006 – Legal notice issued to 6th defendant – Ex.A.9.

10. Xerox copy of 10.11.2006 - Reply notice issued by 6th defendant – Ex.A.10.

11. 05.04.1969 – Certified copy of Mortgage Deed - Ex.A.11.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை என் கணவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் என் மாமனார் கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். என் மாமனார் பெயர் என்னவென்றால் ஆறுமுகம். வா.சா.ஆ.1 கிரய பத்திரம்தான் என் மாமனார் ஆறுமுகம் என் மூத்தார் கண்ணனுக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் என்றால் அந்த கிரய பத்திரம் ஏமாற்றி எழுதி வாங்கிக் கொண்டார். வா.சா.ஆ.2 கிரய பத்திரம்தான் என் மாமனார் ஆறுமுகம் என் மூத்தாரின் மனைவி இந்துமதியின் பெயரில் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் என்றால் அந்த கிரய பத்திரம் ஏமாற்றி எழுதி வாங்கிக் கொண்டார். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களை நான் முதன்முதலில் எப்பொழுது பார்த்தேன் என்றால் பத்திரம் பண்ணவுடன் என் கணவர் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தபோது மேற்படி கிரய பத்திரங்கள் குறித்து எங்களுக்கு தெரியவந்தது. நான் மேற்படி வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வில்லங்க சான்றிதழ் உள்ளதா என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்துகள் என் மாமனாரின் கையெழுத்துக்களா என்றால் என் மாமனாரின் கையெழுத்துகள் இல்லை. இந்த வழக்கு போடுவதற்கு முன்பு கொடுத்த அறிவிப்பிலும், வழக்குரையிலும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் உள்ள கையெழுத்துக்கள் என் மாமனாரின் கையெழுத்துகள் இல்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. சாட்சி மீண்டும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் உள்ள கையெழுத்துக்கள் என் மாமனாரின் கையெழுத்துக்கள் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. என் கணவர் கொடுத்த அறிவிப்பில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் உள்ள கையெழுத்துக்கள் என் மாமனாரின் கையெழுத்துக்கள் இல்லை என்று சொல்லவில்லை என்றும், நான் தற்போது வழக்கிற்காக வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் என் மாமனாரின் கையெழுத்துக்கள் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் கொடுத்த அறிவிப்பில் என் மாமனார் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்ற விவரமும்

சொல்லவில்லை என்றும், நான வழக்கிற்காக தற்போது என மாமனார் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறாகும். கிரய பத்திரங்கள் எழுதிய அன்று அவருடைய பிள்ளைகள் ஆட்சேபனை செய்தார்கள் என்ற விவரம் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் கிரய பத்திரங்கள் எழுதும்போது ஆட்சேபனை செய்தார்கள். வழக்கு சொத்து என் மாமனாரின் சுயசம்பாத்திய சொத்து என்றும், அதனை என் மாமனார் என் மூத்தாருக்கு பிரதிபலன் பெற்று கொண்டு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதனை ஆட்சேபனை செய்வதற்கு என் கணவருக்கும், எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றும் சொன்னால் என் மாமனார் கிரய பத்திரங்களில் கையெழுத்து எதுவும் போடவில்லை. என் மூத்தார் கண்ணன் அரசாங்க ஊழியர் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி இந்துமதியும் அரசாங்க ஊழியர் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை கிரயம் வாங்குவதற்கு முன்பு என் மூத்தார் கண்ணனுக்கும், அவரது மனைவிக்கும் எவ்வளவு ஏக்கர் நிலம் தையூரில் இருந்தது என்றால் 4 ஏக்கர் நிலம் தையூரில் இருந்தது. மேற்படி 4 ஏக்கர் சொத்து அவர்கள் இருவரும் கிரயம் வாங்கி சொத்து என்றால் சரிதான். ஆறுமுகத்தின் மற்ற பிள்ளைகளுக்கு தையூரில் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் யாருக்கும் எந்த நிலமும் இல்லை. ஆறுமுகத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் மொத்தம் 6 நபர்கள் வாரிசுகள். மேற்படி 6 நபர்களில் என் கணவர் தவிர வேறு எந்த வாரிசுகளாவது கிரய பத்திரங்கள் தவறானது என்று அறிவிப்பு மற்றும் வழக்கு போட்டுள்ளார்களா என்றால் யாரும் போடவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் உள்ள ஒவ்வொரு பக்கங்களிலும் உள்ள கையெழுத்துக்களை என் மாமனார் நல்ல மனநிலையில் இருக்கும்போது தகுந்த பிரதிபலனை பெற்றுக்கொண்டு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரங்களில் உள்ள கையெழுத்து என் மாமனாருடையதில்லை என்பதை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஏதாவது மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்திற்கான வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் இருந்தது என்றால் என் மாமனார் பெயரில் இருந்தது. வருவாய் துறை ஆவணங்கள் என் மாமனார் பெயரில் இருந்தது என்பதற்கான சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் எதுவும் தாக்கல்

செய்யவில்லை. கிரயம் வாங்கிய நாள் முதல் 1ம் பிரதிவாதி மற்றும் 6ம் பிரதிவாதியும் சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார்கள் என்றும், நான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் பயிர் வைக்க சென்ற போது கைகலப்பு ஏற்பட்டது என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து ஆறுமுகத்தின் தனிப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தை கிரயம் செய்வதற்கு ஆறுமுகத்திற்கு உரிமை உள்ளது என்றும், வழக்கு சொத்தில் நான் உரிமை எதுவும் கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை